# தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம்

எண். 208/2, ஜவஹர்லால் நேரு சாலை, அரும்பாக்கம், சென்னை – 600 106
தொலைபேசி எண் : 2363 5011 நிகரி : 2363 8282, 2363 8283
மின்னஞ்சல் – tnsec.tn@nic.in இணையதளம் – www.tnsec.tn.nic.in

---

## செய்தி வெளியீடு

செய்தி வெளியீடு : 03/2024 நாள் : 15.08.2024.

### சுதந்திர தின விழா

**2024–ம் ஆண்டு 78வது சுதந்திர தின விழாவினை முன்னிட்டு, தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையத்தில், தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையர் திருமதி. பா. ஜோதி நிர்மலாசாமி இ.ஆ.ப., (ப.நி) அவர்கள் தேசியக் கொடியினை ஏற்றி வைத்து மரியாதை செலுத்தினார்கள்.**

78வது சுதந்திர தின விழாவினை முன்னிட்டு, இன்று (15.08.2024) தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணைய வளாகத்தில், தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையர் திருமதி. பா. ஜோதி நிர்மலாசாமி இ.ஆ.ப (ப.நி.) அவர்கள் தேசியக் கொடியினை ஏற்றி வைத்து மரியாதை செலுத்தி, காவல்துறையினரின் மரியாதையை ஏற்றுக் கொண்டார்கள். இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்ட அலுவலர்கள், காவல்துறையினர் மற்றும் அலுவலகப் பணியாளர்களுக்கு இனிப்புகள் வழங்கி தனது மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொண்டார்கள்.

இவ்விழாவில், தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணைய செயலாளர் திரு. கி. பாலசுப்ரமணியம், இ.ஆ.ப., அவர்கள் மற்றும் ஆணையத்தின் அலுவலர்கள், பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

15/8/24

மக்கள் தொடர்பு அலுவலர்.